# வேர்கள்

இலண்டன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக காலாண்டு இதழ்
LONDON TAMIL CATHOLIC QUARTERLY

ROOTS

LONDON TAMIL CATHOLIC CHAPLAINCY, 304, GARRATT LANE, EARLSFIELD, SW 18 4EH, U.K,
E-Mail: Verkalgb@gmail.com, Website: www.tamil-rcchaplaincy.org.uk Tel: 02088706257

வேர் - 3 | கிளை - 7 | 25.12.2018 | விலை : £1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்
Lewshiam பணிக்குழு



தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்
Earlsfield பணிக்குழு



தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்
Gants Hill பணிக்குழு



தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்
Southall பணிக்குழு



தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்
இறை தியான வழிபாட்டு பணியகம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயந்திரமயமான நவநாகரீக உலகில் கிறிஸ்தவ அன்பு வாழ்வின் முக்கியத்துவம்

இவ்வுலகம் இறைவனால் உருவாக்கப்பட்டத்தில் இருந்து அன்பின் சக்தி உருப்பெற்றிருப்பதை காண முடிகின்றது. இறைவனால் படைக்கப்பட்ட அனைவற்றிலும் மிகவும் உன்னத படைப்பாக மனிதனை படைத்ததிலிருந்து இறைவன் மனிதன் மேல் கொண்ட அன்பு ஆரம்பம் ஆகிறது. தொடர்ந்து ஆதிப்பெற்றோர் செய்த பாவத்தினால் மனிதகுலம் பாவத்தில் மூழ்கிய வேளையிலே இறைவன் மனிதன் மேல் கொண்ட அன்பே மீண்டும் மனித குலத்தை பாவக்குழியில் இருந்து மீட்க தன் ஒரே மகனை இவ்வுலகிற்கு அனுப்பி அவர் மூலம் எமக்கு மீட்பு வாழ்வை. விடுதலை வாழ்வை பெற்று கொடுத்தது. இறைவனால் பெற்றுத்தந்த இவ்வன்பு வாழ்வை கிறிஸ்தவர்கள் ஆகிய ஒவ்வொருவரும் எவ்வளவு தூரம் கடைப்பிடித்து வாழ்கிறோம் என்பது சிந்திக்க வேண்டிய விடையம் ஆகும்.



இறைவனால் மனிதகுலத்திற்கு கொடுத்த ஒரேவரம் அன்பே ஆகும். மனிதகுலத்தின் வளர்ச்சியும், அதன் பாதுகாப்பு கவசமாக அமைவதும் அன்பே ஆகும். இன்னும் அன்பு இயற்கை ஆக அமைந்த ஒரு நியதி, இது நல்வாழ்க்கையின் வரிச்சட்டமாகும்.

ஒரு மனிதன் அன்புடன் கூடிய நல்வாழ்க்கையை வாழ்வதற்கு இறைவன் மோயீசன் மூலம் பெற்றுத்தந்த பத்து கட்டளைகளில் முதல் இரண்டு கட்டளைகளும் அன்பை முதன்மையாக கொண்டே அமைந்துள்ளதை காணக்கூடியதாக உள்ளது. ஒரு கிறிஸ்தவனின் வாழ்வில் அடிநாதமாக திகழ்வது அன்பியாகும், கிறிஸ்தவன் கிறிஸ்தவள் ஆக வாழும் ஒவ்வொருவரும் எப்போதும் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டான ஒரு அன்பு வாழ்வை வாழ வேண்டுமென இறைவன் விரும்புகிறார். இறைவன் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அன்பின் மகத்துவத்தை எடுத்துக் கூறியுள்ளார். (1 கொரிந்தியர் 13) கூறுகிறது.

நான் மானிடரின் மொழிகளிலும் வானதூதரின் மொழிகளிலும் பேசினாலும் அன்பு எனக்கில்லையேல் ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் தாளமும் போலாவேன் இறைவாக்கு உரைக்கும் ஆற்றல் எனக்கு இருப்பினும் மறைபொருட்கள் அனைத்தையும் அறிந்தவனாய் இருப்பினும், அறிவெல்லாம் பெற்றிருப்பினும். மலைகளை இடம்பெயரச் செய்யும் அளவுக்கு நிறைந்த நம்பிக்கை கொண்டிருப்பினும் என்னிடம் அன்பு இல்லையேல் எனக்கு பயன் ஒன்றும் இல்லை அன்பு பொறுமை உள்ளது நன்மை செய்யும் பொறா மைப்படாது தற்புகழ்ச்சி இறுமாப்பு அடையாது. அன்பு இழிவானத்தைச் செய்யாது. தன்னலம் நாடாது. எரிச்சலுக்கு இடம்கொடாது. தீங்கு நினையாது. அன்பு தீவினை யில் மகிழ்வுறாது. மாறாக உண்மையில் அதுமகிழும். அன்பு அனைத்தையும் பெற்றுக் கொள்ளும் அனைத்தையும் நம்பும், அனைத்தையும் எதிர்நோக்கி இருக்கும். அனைத்திலும் மனஉறுதியாய் இருக்கும், இறைவனுக்கு உரைக்கும் கொடை ஒழிந்துபோம் பரவசப் பேச்சு பேசும் கொடையும் ஓய்ந்துபோம். அறிவும் அழிந்துபோம். ஆனால் அன்பு ஒரு போதும் அழியாது.

இவ்வாறு இறைவாழ்வை பின்பற்றி வாழ வேண்டிய ஒவ்வொரு மனிதனும் இன்றைய நவநாகரீக மாற்றங்களில்,

கலாச்சார சீர்கேடுகளில் சிக்கிக் கொண்டும், அவற்றில் மூழ்கிக் கொண்டும் இறை அன்பில், பிறர் அன்பில் இருந்து விலகிச் செல்கின்றான்.

பணம், பதவி, பட்டம் போன்ற மோகத்தால் கட்டுக்கடங்காத ஆசையால் இழுத்துச் செல்லப்பட்டு தனி வாழ்விலும், குடும்ப, சமூக வாழ்விலும் அன்பு உறவை இழந்து விடுகின்றான். தமது தேவைகளுக்கு மட்டும் மற்றவர்களை பயன்படுத்தி விட்டு தேவை முடிந்ததும் அவர்களை தள்ளிவைத்து உறவை முறித்து கொள்கிறான் இறை வார்த்தையில் கூறப்படுகிறது.

"கண்ணால் காணக் கூடியவரை அன்பு செய்யாமல் கண்ணால் காணமுடியாதவரை அன்புசெய்ய முடியாது".

அதாவது பிறரை அன்பு செய்வதன் மூலம் தான் இறைவனை அன்பு செய்ய முடியும் என எடுத்துக்காட்டப்படுகிறது.

**அன்பின் வழியது உயர்நிலை அஃதிலார்க்கு என்தோல் போர்த்த உடம்பு.**
என திருக்குறளில் கூறப்படுகின்றது.

அதாவது அன்பின் வழி ஒழுகுவார் உடைய உடம்புகளே உயிர்நிலைத்து வாழும் உடல்கள் ஆகும். அன்பிலாதவர்களுக்குரிய உடம்புகள் எலும்பை தோலால் போர்த்து மூடி வைத்துள்ள வெற்றுடம்புகளே யாம் என்பதாகும்.

இவ்வாறு அர்த்தம் நிறைந்த ஞானிகளின் கருத்துக்களை மையப்படுத்தி ஒவ்வொரு புனிதர்களின் வாழ்வையும் பின்பற்றி ஒரு மனிதன் வாழ்வதன் மூலம் அவன் இறை அன்பு வாழ்வில் முழுமை அடைகிறான்.

தற்போது வளர்ந்துவரும் விஞ்ஞான வளர்ச்சியால் ஏற்படும் காலமாற்றத்தால் மனிதன் இறைபற்று இன்றி அஞ்ஞானவழி செல்கின்றான்.

அன்பு உறவுக்கு எதிரான செயல்களான கருச்சிதைவு, பாலியல் வன்முறைகள், விவாகரத்து போன்றவற்றில் சிக்கி சிதைந்து

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போகின்றான். இந்நிலைமாற வேண்டும். தற்போதைய சூழ்நிலைகளில் ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் உறவுகளுக்கு இடையை உள்ள தொடர்புகளைவிட! தொலைதொடர்பு சாதனங்கள் கணணி, தொலைபேசி போன்றவற்றின் தொடர்புகளே அதிகமாக காணப்படுறிறது. இதற்குள் அடிமையாகி தானும் ஒரு இயந்திரமாக மாறி விடுகின்றான்.

உறவுகளுக்கிடையே அன்பாக பேசி நன்மை தீமைகளை பகிர்ந்து ஒருவருக்கொருவர் ஆறுதல் அடையாது வெளியே சொல்ல முடியாத உள்ளக் குமுறல்களை தனக்குளே அடக்கி வைத்து மனநோய்களுக்கு உள்ளாகின்றான்.

எனவே ஒவ்வொருவரும் தமக்கும் கிடைக்கும் நேரத்தை தகுந்த முறையில் பயன்படுத்த வழிஅமைக்க வேண்டும். அதாவது சிறையில் இருப்போர், கைவிடப்பட்டோர், மாற்றுத்திறனாளிகள், உறவுகளை இழந்து தனிமையில் அன்புக்காக ஏங்கும் வயோதிபர்கள், தீராத வியாதிகளால் துன்புறுவோர் போன்றோரை முடிந்த அளவு தேடிச் சென்று அன்பும்ஆறுதலும் நிறைந்த வார்த்தைகளாலும் சரீர உதவிகளாலும் தமது அன்பை, ஆறுதலை கொடுப்பதன் மூலம் அவர்களில் மகிழ்ச்சியை காண முடியும்.

சத்திய வாழ்வுக்கு குரல்கொடுத்த அன்னை திரேசா கூறுகிறார்,
தேவாலயத்தில் விரிக்கும் இரத்தின கம்பளமாய் இருப்பதைவிட ஒரு ஏழையின் கண்ணீரை துடைக்கும் கைக்குட்டையாக இருப்பதை விரும்புகிறேன். இதன் அர்த்தம் புரிந்து மனிதன் வாழ வேண்டும் கிறிஸ்தவன் என்ற பண்புடன் வாழும் ஒவ்வொருவரும் அன்புக்கு எதிரான தற்பெருமை, பொறாமை, பழிவாங்குதல் போன்ற துர்குணங்களை தகர்த்தெறிந்து அன்பின் பிறப்பிடமான கருணை, இரக்கம், தியாகம், பொறுமை போன்ற நற்பண்புகளை வளர்த்து கொள்வதன் மூலம் பிறர் அன்பு வாழ்வை அர்த்தமுள்ளதாக்க வேண்டியது அவசியமான ஒன்றாகும்.

மனித வாழ்வானது எவ்வளவு காலம் வாழ்த்தோம் என்பதல்ல எப்படி வாழ்ந்தோம் என்பதாகும். இறைவனுக்கு மகிமையும் மனிதனுக்கு சேவையும் தரும் நல்வாழ்வாக, அன்பு வாழ்வாக அமைவதையே கிறிஸ்தவனாக கிறிஸ்தவளாக கடைபிடிக்க வேண்டிய ஒரு விடையம் ஆகும்.

மேகம் தனக்காக மழை பொழிவதில்லை ஆடுகின்ற மயில் தானே தன் அழகை இரசிப்பதில்லை நிலம் தனக்கென்று பொன்னையும், மணியையும் அணிந்து கொள்வதில்லை. என்பதற்கமைய கலப்பட மற்ற, சுயநலமில்லா முழுமையான பிறர் அன்பு வாழ்வை தனது மீட்ப்புத் திட்டத்தின் மூலம் இறையேசு எமக்கு பெற்றுத் தந்தார். அவரின் வழியில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தம் அன்பு வாழ்வை ஒளிரச் செய்வது தலைசிறந்த ஒன்றாகும். அன்பு ஒன்றே எத்துன்பத்தையும் உடைத்தெறியும் சக்தி வாய்ந்தது.

அன்பே இறைவன். அன்பே உலகின் ஒளி. அன்பே மாந்தரின் நிறை வாழ்வு என்பதன் பொருள் உணர்ந்து வாழ்வதன் மூலம் இறையேசுவின் பிறப்பு விழாவை அர்த்தமுள்ள விழாவாக, அன்பை பிரதி பலிக்கும் விழாவாக கொண்டாட ஒவ்வொருவரின் உள்ளங்களில் இருக்கும் கறைகளை புடமிட்டு தூய்மையாக்கி இறை அன்பால் பாரலனை வரவேற்க தம்மை தயார் ஆக்குவது ஒவ்வொரு கிறிஸ்தவனின் மிக பெரிய பொறுப்பாகும்.

**- திருமதி நளினி அன்ரன்**
**Nalini Anton Thiruchelvam**
**(Eastham Cathechist)**

# இலண்டனில் சொந்தமாக ஆலயம் ஏன்?



"கோவில் இல்லாத ஊரில் குடியிருக்காதே" என்பது பழமொழி.

ஏறத்தாழ தமிழ் கத்தோலிக்கரின் தற்போதைய நிலையானது இப்பழமொழிக்கு ஒப்பானதாகவே காணப்படுகிறது. எமக்குச் சொந்தமில்லாதது ஒன்றுமே எமக்கு நிரந்தரமென இல்லாததுதான். இலண்டனுக்கோ ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கோ தமிழர்கள் அகதிகளாகத் தான் அநேகர் வருகை தந்தோம். ஆனால் பல வீடுகள், கடைகள் எனப் பலவற்றை சொந்தமாகத் தான் வாங்கி வைத்திருக்கிறோம். அதிலும் இந்துக்கள் மற்றும் இஸ்லாமிய சகோதரர்கள் ஒன்றல்ல பல மசூதிகள், கோவில்கள், சனசமூக நிலையங்கள் என்று வாங்கி வைத்திருக்கிறார்கள்.

மற்றும் ஆங்கில ஆலயங்களில் எமக்குத் தேவையான நேரங்களில் திருப்பலி ஒப்புக் கொடுக்க முடியாது. திருப்பலி முடிந்தவுடன் வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலையானது மனதுக்குக் கஷ்ரமாகவுள்ளது. மாதத்திற்கு ஒரு தடவை சந்திப்பவர்களுடன் கூடவே உறவாட முடியாத நிலை. மறைக்கல்வி கற்பிக்க இடமில்லை.

நத்தார் மற்றும் புதுவருடத் நள்ளிரவுத் திருப்பலி ரூட்டிங், வொளிங்ரன் பகுதிகளில் வைக்க முடியாது. தமிழ்த் திருப்பலி ஒப்புக்கொடுக்கத் தாயகத்திலிருந்து மேலதிக குருவை அழைக்கப் போதுமானவளவு நிதிப்பற்றாக்குறை காணப்படுகிறது.

நத்தார் விழா, மறைக்கல்விப் போட்டியும் அது தொடர்பான கூட்டங்கள், குடும்ப விழா நிகழ்வுகள் அனைத்து ஆங்கிலக் கோவிலுக்கு உரிய வருடாந்த வாடகை போன்ற பலவற்றுக்கு பணம் வீணாகச் செல்கிறது.

ஆலயத்தோடு சேர்த்து ஒரு பெரிய மண்டபத்தைக் கட்டினால் அதை தேவையற்ற நேரங்களில் வாடகைக்கு விட்டு, அப் பணத்தைத் தேவையானவற்றுக்குப் பயன்படுத்தலாம்.

அப்பணத்தை தாயகத்தின் தேவைகளுக்கும் அனுப்பலாம். ஆன்மீகப் பணியகம் அமைந்துள்ள பகுதியில்தான் ஆலயம் அமைய வேண்டும். இத்தனை ஆண்டுகளாகத் தொடங்கித் தொடர்ந்த பணியகத்திற்கு அருகே, இதனைச் சுற்றியுள்ள இடங்களில் அமைய வேண்டியதுதான் யதார்த்தாகக் காணப்படுகிறது.

**- பற்றிக்**
**Wallington Mass centre**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Pope Francis said hope "shatters that conformism which says 'it's always been done like this"



Pope Francis began the Synod on young people Oct. 3 with a homily calling for the Holy Spirit to renew hope and dynamism in the Church.

Hope can "broaden our horizons, expand our hearts and transform those frames of mind that today paralyze, separate and alienate us from young people," said Pope Francis.

The Synod of Bishops commenced its fifteenth ordinary general session with Pope Francis asking to begin the assembly "anointed by hope."

"Hope challenges us, moves us and shatters that conformism which says, 'it's always been done like this," he continued.

In a historic first, two bishops from mainland China are participating in the Synod of Bishops due to the Holy See's provisional agreement with China on the appointment of bishops in September.

One of the bishops at the synod, Bishop Giuseppe Guo Jincai of Chengde, was among the seven bishops recognized by the Vatican on Sept. 22.

"The communion of the entire Episcopate with the Successor of Peter is yet more visible thanks to their presence," the pope said as he welcomed the delegates from China.

The Synod of Bishops is taking place over three weeks from October 3-28 and will focus on the themes of young people, the faith, and vocational discernment.

"Hope asks us to get up and look directly into the eyes of young people and see their situations," said Pope Francis, "This same hope asks us to make efforts to reverse situations of uncertainty, exclusion and violence, to which our young people are exposed."

More than 300 participants are gathered in Rome, including clerics and religious, as well as 49 auditors, among them 36 young people from five continents.

"May the Spirit give us the grace to be a memory that is diligent, living and effective, that does not allow itself from one generation to the next to be extinguished or crushed by the prophets of doom and misfortune, by our own shortcomings, mistakes and sins," Pope Francis prayed. "Rather may it be a memory capable of enkindling our hearts and of discerning the ways of the Spirit," he continued. "With this attitude of docile listening to the voice of the Spirit, we have gathered from all parts of the world."

"The Holy Spirit will be the first to preserve, to keep alive and relevant, the memory of the Lord in the heart of his disciples. It is the Spirit who ensures that the richness and beauty of the Gospel will be a source of constant joy and freshness," he said.

# மரண தண்டனை மனித மாண்புக்கு எதிரானது - திருத்தந்தை பிரான்சிஸ்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மரண தண்டனை குறித்து, கத்தோலிக்க மறைக்கல்வி ஏட்டில் செய்துள்ள மாற்றம், விசுவாசத்தின் சாரத்தைத் தெளிவுபடுத்துவதற்கும், மனித மாண்பைப் பாதுகாப்பதற்கும் எடுக்கப்பட்டுள்ள முயற்சியாக உள்ளது என, பேராயர் ரீனோ பிசிகெல்லா (Rino Fisichella) அவர்கள் கூறியுள்ளார்.

கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி ஏடு, எண் 2267ல் மரண தண்டனை குறித்து செய்யப்பட்டுள்ள மாற்றம், இதற்கு முந்தைய திருஅவையின் போதனைகளின் தொடர்ச்சியாக உள்ளது என்று, புதிய வழிகளில் நற்செய்தி அறிவித்தலை ஊக்குவிக்கும் திருப்பீட அவையின் தலைவர், பேராயர் பிசிகெல்லா அவர்கள் கூறியுள்ளார்.

லொசர்வாத்தோரே ரொமானோ எனப்படும் வத்திக்கானின் நாளிதழில், இவ்வாறு தன் கருத்துக்களை எழுதியுள்ள பேராயர் பிசிகெல்லா அவர்கள், இந்த மாற்றத்திற்கென கொடுக்கப்பட்டுள்ள மூன்று காரணங்கள் பற்றியும் விளக்கியுள்ளார்.

கடுமையான குற்றங்கள் புரிந்திருந்தாலும் கூட, ஒருபோதும் இழக்க இயலாத ஒவ்வொரு மனிதரின் மாண்பை அங்கீகரித்தல், இக்காரணங்களில் முக்கியமானது என்றும், கிறிஸ்தவர்களின் விழிப்புணர்வில் நேர்மறையான மாற்றத்தை இது கொணரும் என்றும், கூறியுள்ளார், பேராயர் பிசிகெல்லா.

நாடுகள், தற்போது, தடுப்புக்காவலில் மிகவும் கடுமையான அமைப்பு முறைகளைக் கொண்டிருக்கும் வேளையில், குற்றவாளிகள் மனமாற்றம் அடையவும், மீட்படையும் இந்த மாற்றம் உதவும் எனவும், கருத்து தெரிவித்துள்ளார், பேராயர் பிசிகெல்லா.

இந்த மாற்றம் குறித்த அறிக்கையை, திருப்பீட விசுவாசக் கோட்பாட்டு பேராயத்தின் தலைவர், கர்தினால் டுரளை Francisco Ladaria அவர்கள் வெளியிட்டார். - வத்திக்கான் செய்திகள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னிப்பு

**'நீங்கள் ஒரு நபர் மீது எரிச்சலும் கோபமும் கொள்ளும்போது உங்கள் மூளையில் ஒரு வடிவம் உருவாகிறது. உங்கள் எரிச்சலும் கோபமும் அதிகரிக்க அதிகரிக்க அந்த வடிவம் ரொம்ப வலுவாக மாறிவிடுகிறது. அந்த வலுவான நிலைமை பின்னர் உங்கள் இயல்பாகவே மாறிப் போகிறது. அதன் பின் கோபமும், எரிச்சலும் இல்லாமல் வாழ்வது உங்களுக்கு குதிரைக் கொம்பாகி விடும்'** என்கின்றன மருத்துவ ஆராய்ச்சிகள். 'மன்னிக்கும் பழக்கமுடைய மனிதர்கள் ஆனந்தமாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கிறார்கள்' என்கின்றன.

பல்வேறு ஆராய்ச்சி முடிவுகள். 'கேம்பைன் பாரபர்கிவ்னஸ் ரிசர்ச்' சுமார் 48 ஆராய்ச்சிகளின் முடிவை விலாவரியாக எடுத்துரைக்கிறது. எல்லா ஆராய்ச்சிகளுமே மன்னிக்கும் மனிதர்கள் உடலிலும் உள்ளத்திலும் ஆரோக்கியமாகவும் ஆனந்தமாகவும் இருப்பதாக அடித்துச் சொல்கின்றன. ஸ்டான்போர்ட் பல்கலைக்கழக பேராசிரியர் தனது 'லேர்ன்டுபர்கிவ்' (மன்னிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்) எனும் நூலில் மன்னிப்பின் மகத்துவத்தையும் அதுதரும் ஆரோக்கியமான வாழ்க்கையையும் பற்றி பிரமிப்பூட்டும் வகையில் எழுதியிருக்கிறார். மன்னிப்பவர்களுக்கு புற்றுநோய் வரும் வாய்ப்பும் குறைவு என்கின்றன ஏல் மெடிக்கல் பல்கலைக்கழக ஆய்வுக் கட்டுரைகள். மன்னிக்கும் மனம் நமது உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும். மன அழுத்தத்தை குறைக்கும். இதுவே காரணமாம். இந்தியா மதங்களின் நாடு. மதங்கள் எல்லாமே மன்னிப்பைப் பேசுகின்றன. ஒரு மனிதன் தேவ நிலையை அடைய வேண்டுமெனில் மன்னிப்பும் அவனிடம் இருக்க வேண்டும்' என்கிறது பகவத்கீதை. இஸ்லாம் கடவுளை 'அல்கபிர்' என்கிறது முழுமையாய் மன்னிப்பவர் என்பது அதன் அர்த்தம். 'மன்னிக்க மறுப்பவர்கள் சுவர்க்கம் செல்ல முடியாது' என்கிறது கிறிஸ்தவம்.

ஆனால் மதங்களைப் பின்பற்றும் நமது நாட்டில் மன்னிப்பு எவ்வளவு தூரம் ஆரோக்கியமாக இருக்கிறது? நாட்டில் நடைபெறும் இன்றைய நிகழ்வுகளை மீடியாக்களில் பார்த்தாலே உண்மைத் தன்மையை தெரிந்து கொள்ள முடியும். மன்னிப்பு சட்ட திட்டங்களால் வருவதில்லை. மன்னிக்கும் மனதுடைய மக்களுடன் பழகும்போது நம்மை அறியாமலேயே அந்த நல்ல பழக்கமும் நம்முடன் வந்து ஒட்டிக் கொள்கிறது. மன்னிக்கும் மனநிலை பெற்றோருக்கு இருந்தால் பெற்றோர்களைப் பார்த்து வளரும் குழந்தைகள் மன்னிக்கும் மனநிலையை எளிதாகவே பெற்று விடுவார்கள். குழந்தைகளுக்கு மன்னிக்கும் மனம் இயல்பாகும் போது எதிர்கால சமூகம் வன்முறைகளின் வேர்களை அறுத்துவிடும். அடுத்தவர்களுடைய மனநிலையில் இருந்து கொண்டு நமக்கு நேர்ந்த கசப்பான நிகழ்வை யோசித்துப் பார்த்தால் பெரும்பாலான கோபங்கள் விலகி விடும். குறிப்பாக கணவன் மனைவி குடும்பத்தினருக்கு இடையேயான பிணக்குகள் எரிச்சல்கள் வெறுப்புகள் போன்றவையெல்லாம் கதிரவன் கண்ட பனி போல விலகிவிடும்.

பலவேளைகளில் நாம் கோபத்தை விட்டுவிட ரொம்பவே தயங்குகிறோம். கோபம் என்பது வீரத்தின் அடையாளம் என்று போலியாக கற்பனை செய்து கொள்கிறோம். எதிர்நபர் மன்னிப்புக்குத் தகுதியற்றவர் என்று முடிவுகட்டி விடுகிறோம். அப்படி நினைப்பதன் மூலம் நாம் பெரியவர்களாக முயலும் உளவியல் சிக்கலே இது. மன்னிப்பு கடந்த காலத்தின் நிகழ்வுகளை மாற்றாது. ஆனால் அது எதிர்காலத்தின் பாதைகளில் ஆனந்தமான பூக்களைச் சொரியும். வாழ்க்கை பணத்தினாலோ செல்வத்தினாலோ கட்டப்படுவதல்ல. அது அன்பின் இழைகளால் பின்னப்படுவது. உண்மையான அன்பு இருக்கும் இடத்தில் மன்னிக்கும் மனம்தானே முளைவிடும். மன்னிப்புக் கேட்கும் எவருக்கும், மன்னிப்பை மறுக்காதீர்கள்.

மன்னிப்புக் கேட்காதவர்களையும் மன்னிக்க மறக்காதீர்கள். மன்னித்து மகான் ஆகுங்கள்.

**அருட்பணியாளர்**
**எஸ்.ஏ.றொஷான்**

# டிஜிற்றல் யுகத்தில் கால் பதிக்கிறது யாழ்.புனித வளன் கத்தோலிக்க அச்சகம்
## "ஆரம்ப ஆசியுடன் ஆயர்"

உலகமே கைக்குள் வந்தபின்பும் எமது புனித யாழ்.வளனார் கத்தோலிக்க அச்சகமானது கையால் தட்டச்சை தட்டுவதில் நியாயமேயில்லை.

வரலாற்றுப் பழமை வாய்ந்த புனித வளனார் கத்தோலிக்க அச்சகமானது இப்போது நவீன தொழிநுட்பத்துடன் இலத்திரனியல் இணைந்து விட்டது எமக்கெல்லாம் பெரு மையே அத்துடன் சூரிய ஒளி மூலம் இயங்கும் மின்னுற்பத்தி இயந்திரத்தையும் செயற்படுத்த வைத்தமை மிகவும் வரவேற்கத்தக்கது. முன்னாள் இயக்குநரும் இன்னாள் ஆயருமாகிய யாழ். ஆயர் பேரருட் கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் 02-08-2018 வியா முக்கிழமை அன்று புதிய டியிற்றல் இயந்திரப் பிரிவை ஆரம்பித்து வைத்தார். இன்னாள் இயக்குநர் அருட்பணி எயின்சிலி றொஷான் அடிகளாரின் கடின உழைப்பே இதற்குக் காரணமாகியது. அடிகளாரை பாராட்டி நன்றி தெரிவித்து நிற்கின்றோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகிர்வில் மகிழ்வு!

'வேர்கள்' சஞ்சிகையுடன் சங்கமிக்கும் உள்ளங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான வணக்கம். இச்சஞ்சிகை மூலம் எம் உறவுகளைச் சந்திப்பது மகிழ்ச்சி அத்துடன் 'வேர்கள்' தழைத்து ஊன்றி பரந்தவிருட்சமாக வளர, நீர் ஊற்ற வேண்டியவர்கள் நாம் அல்லவா?

முதலில் எம் தமிழ் ஆன்மீகப் பணியக இயக்குநர் அருட்தந்தை எல்மோ அடிகள், பணியேற்று எட்டு மாதங்கள் ஆன்மீக வாஞ்சையுடனும், ஆண்டவன் அருளோடும் ஆற்றிய சேவைக்கும், அவருடன் தோளோடு தோள் நின்று பணியாற்றிய தொடர்பாளர்கள், பங்குகளின் பற்பல தொண்டர்கள் அனைவருக்கும் செபத்துடன் கூடிய நன்றிகள். இவர்களின் அர்ப்பணிப்பும் உழைப்பும் வேர்களின் வளர்ச்சிக்கு நீர் தெளிப்பதாக அமைகிறது.

புரட்டாதி 2018 இல் அமைந்த புதிய உறுப்பினர்கள் தெரிவானது, கற்பாறை மீது கட்டப்பட்ட இல்லமாக இங்கிலாந்துக் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகமானது புதுப்பொலிவுடன் திகழுகிறது.

இவ்வாறு வேரை ஊன்றவைக்கும் ஊக்குவிப்பில் திருச்சபைத் தலைவர் என்ற வகையில் எம் பருசுத்த தந்தை இம் மாதம் ஆவணி 21-26ந் திகதிகளில் அயர்லாந்தின் தலைநகர் டப்ளினில் உலகளாவிய குடும்பச் சந்திப்பை (WORLD MEETING OF FAMILY) மேற்கொண்டார்.

பங்குனி 19, 2016ம் ஆண்டில் அவரால் வெளியிடப்பட்ட 'அன்பின் மகிழ்வு' THE JOY OF LOVE என்ற குடும்பத்தில் அன்பு என்று அறைகூவி அழைக்கும் மடலை மையமாக்கி குடும்பங்களுடன் கொண்டாடியது. குடும்பங்கள் எதிர்நோக்கிய பாலியல் துஸ்பிரயோகங்கள், அவை கவனத்திற்கு கொண்டு வராமை, அதற்கான பரிகாரமோ, பிராயச்சித்தமோ செய்யப்படாமை, பாதிப்படைந்தோர், அதற்கு காரணமானோர் என்னும் தலைப்புகள் ஆராயப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்டவை அன்பு, உண்மை, நீதி என்ற அடிப்படையில் இறை ஒளியின் துணை கொண்டு ஆராயப்பட்டன. இறை அன்பில் வாழும் குடும்பமே சமூகத்தின் வேராக விளங்குகிறது.

பருசுத்த தந்தையின் சந்திப்பானது, திருச்சபையின் புதிய விழிப்புணர்வுக்கும், காலத்தோடு இணைந்து செல்வதற்கும், கருணை, மன்னிப்பு போன்ற விழுமியங்களை வாழ்வில் வாழவும் வழியாக அமைந்தது.

'விசுவாசம்' என்னும் வேரினால் வாழும் எமது வாழ்வினால் இறைவனைக் காண்போம். இந்த ஒளி குறைகள், சந்தேகங்கள், அவநம்பிக்கைகள் போன்ற எல்லாவற்றையும் நீக்க உதவும்.

எமது குடும்பங்கள் உறுதியான இறைவேரில் கட்டப்பட்டு மகிழ்ச்சியாகவாழ இறைஅருள் கிடைக்கட்டும்.

ஊற்றும் உயிரும் வாழ்வும் வளர்ச்சியுமான ஆணி வேரானவர் இறைவன் என்பதை ஏற்று வாழ்வோம்.

- Sister Sophie

# தமிழ் கத்தோலிக்க ஆன்மீக பணியகம் பிரித்தானியா - நிர்வாகசபைக் கூட்டம் புரட்டாசி - 2018

**புதிய** நிர்வாகசபைக் கூட்டம் 29-09-2108 அன்று புனித கிரகரி ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. குருவானவர் எல்மோ அருள்நேசன் ஜெயராஜா தலைமையில் செபத்துடன் ஆரம்பித்து நடைபெற்றது. பல பணிக்குழுக்கள் குருவானவரால் நிறுவப்பட்டது. பல கேள்விக் கொத்துகள் வழங்கப்பட்டு அதற்கான பதில்களும் கொடுக்கப்பட்டது.

தொடர்ந்து அடுத்துவரும் இரண்டு ஆண்டு களுக்கான நிர் வாக அங்கத்த வர்களும் தெரிவு செய்யப்பட்டனர். எட்டு பணிக்குழுக்கள் நிறுவப்பட்டது. இதன் அங்கத்தவர்கள் அதற்குரிய வேலையில் அந்தந்தப் பொறுப்புகளை ஏற்று வழிநடத்துவார்கள். ஆனாலும் அனைத்துமே வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் அனைவரிடமும் ஒப்படைப்பது மிகவும் வரவேற்கத்தக்கது.

தனித்து ஒவ்வொரு பங்கின் தொடர்பாளர்களிடம் பொறுப்புகளைக் குவிக்காமல், சாளரங்களை அகலத்திறந்து அனைவரையும் உள்வாங்கிச் செயல்படுவது மிகமிகச் சிறந்தது.

எத்தகைய பொது நிகழ்விற்கும் குருவானவர் எல்மோ அருள்நேசனின் தலைமையில் தொடர்பாளர்களும் பணிக்குழு இயக்குநர்களும் இணைந்தே, அனைத்துப் பொறுப்புகளையும் ஏற்று நடாத்துவர்.

# வாழ்வும் வழிபாடும்

தமிழ் பேசும் கிறிஸ்தவ நல்லுறவுகளே, நாம் உண்மைக் கிறிஸ்தவர்களாக வாழும் போதுதான் வாழ்வு என்னும் பயிரை சுவைக்க முடியும். நாம் ஞானஸ்நானம் என்னும் திருவருட்சாதனத்தால் அழியா முத்திரைபதித்து கிறிஸ்துவோடு ஒன்றாக வாழத் தகுதிபெறுகிறோம். ஆனால் அன்றாட வாழ்வில் கிறிஸ்துவை மையப்படுத்திய வாழ்வை வாழ்கிறோமா? அல்லது முயற்சி எடுக்கிறோமா? திருச்சபையின் கடமைகளை செவ்வனவே நிறைவேற்றுகிறோமா? எங்கும் போட்டி, பொறாமை, பேராசை, அநீதி என்று அகன்று கொண்டே செல்கிறது.

அநேகமாக ஞாயிறு கடன்திருநாள் என்று ஆலயம் செல்லும் நாம் அதன் விழுமியங்களை அன்றாட வாழ்வில் வாழ வேண்டும்.

ஒவ்வொரு குடும்ப அங்கத்தவர்களும் உண்மையான அன்பும், ஒற்றுமையும், சமாதானமும் அத்துடன் விட்டுக்கொடுப்பும் உள்ளவர்களாக வாழவேண்டும். இங்கு குடும்பம் ஒரு கோவிலாக மாறுகிறது. அத்துடன் இறைவனின் மிகப்பெரிய ஆசீர் வாத மாகத் திகழுகிறது.

அன்றாடம் குடும்பமாக இருந்து, குடும்பச் செபமாலையுடன் எமது இளையோரைப் பழக்கப்படுத்த வேண்டும். ஐந்து நிமிடமாவது வேதாகமத்தை வாசித்து அக்கருவூலங்களை வாழ வழிவகுக்க வேண்டும்.

எமது தாயக மக்களுக்காகவும், ஒடுக்கப்பட்டோருக்காகவும் செபிப்போம். நாமும் எமது பிள்ளைகளுக்கு, முன்மாதிரிகையான கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்து காட்டுவோம். நாம் மனமாற்றம் பெற்றவர்களாகத் திகழ உறுதி எடுப்போம். இயன்ற சரீர பண உதவிகளைத் தேவையானவர்களுக்குச் செய்வோம்.

ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம். வாழ்வும் வழிபாடும் சரிநிகர் கோட்டில் நடைபயிலட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழ்மையின் கோலத்தால் புனிதம் மலர்ந்தது



ஏழ்மையின் உருவாக ஏழைகளின் அரசனாக புவியின் விடிவெள்ளியாக இவ்வுலகில் பிறந்த இயேசுவின் பிறப்புப் பற்றிய செய்தி முதன்முதலில் மந்தைகளை மேய்க்கும் மேய்ப்பர்களுக்கே வானதூதரினால் அறிவிக்கப்பட்டது. ஆனால் இக்காலகட்டத்தில் ஏழை எளியவர்களை தகர்த்தெறிந்து ஒதுக்கி வைக்கும் சந்தர்ப்ப சூழ்நிலைகளும் சம்பவங்களும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேதான் இருந்தன. எனினும் இன்று நாம் கொண்டாடும் கிறிஸ்மஸ் என்னும் விழாவின் கதாநாயகனாகிய இயேசுகிறிஸ்து அன்று ஏழ்மையின் உருவாக ஏழைகளின் அரசனாக பிறந்தார் என்பதை நாம் ஒரு போதும் மறந்துவிடக் கூடாது.

**"ஏழையர்களின் உள்ளத்தோர் பேறுபெற்றவர்கள் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியதே"**

விண்ணிலிருந்து மண்ணிற்கு மனித உருவெடுத்து ஏழையரின் வடிவில் வந்த பாலகனின் பிறப்பை நாம் வெறும் கொண்டாட்ட விழாவாக பார்க்காது மனிதன் இழைத்த தவறினால் ஒளியிழந்து இருளாகிப்போன பூமிக்கு மீட்பு எனும் ஒளியினை கொடுத்த மீட்பர் இயேசுவின் பிறந்த தினமாய் நாம் மகிழ்வுடன் கொண்டாட வேண்டும். அதுவே இவ்விழாவின் சிறப்பாகும்.

பாவத்தினால் இழந்துபோன உறவை மீண்டும் இணைக்கவே இறைமகன் மனிதனானார். "இதோ கன்னி கருவுற்று ஒரு மகனை பெற்றெடுப்பார் அவர் இம்மானுவேல் என்று அழைக்கப்படுவார் "என்று இறைவாக்கினர் எசாயா முன்னறிவித்தபடி இயேசு கிறிஸ்து இம்மானுவேல் என்று அழைக்கப்பட்டார். இம்மானுவேல் என்பதன் பொருள் கடவுள் நம்மோடு என்பதாகும். இறைத்தன்மையில் விளங்கிய இயேசு மனிதனோடு மனிதனாக வாழவும் நம்மிடையே இறை சமூக ஒற்றுமையை வளர்க்கவும் நம்முடன் குடிகொண்டிருக்கிறார் என்றுமே எம்முடன் குடிகொண்டிருக்கும் இயேசுவை எம்முடனே தங்கவைக்க எம்மில் குடிகொண்டிருக்கும் பாவம் என்னும் இருளையகற்ற வேண்டும்.

மனுவுருவான இறைமகனின் பிறப்பு விழாவினை கிறிஸ்மஸ் மரம் வைத்து பெரும் ஆடம்பரமாக கொண்டாடாமல் ஆடம்பரத்தினை வெறுத்து ஏழ்மையின் உருவில் பிறந்த அவரை எம் உள்ளங்களிலும் இல்லங்களிலும் ஏற்றுக்கொள்ள மனம் மாறுவோம். இறைசாயலில் படைக்கப்பட்ட நாம் ஏழ்மை உள்ளம் கொண்டவர்களாக மாற வேண்டும். எத்தகைய சூழ்நிலைகளிலும் தாழ்ச்சியுள்ளவர்களாக இருக்க வேண்டும் எம் தாழ்வான வாழ்வின் மூலம் கிறிஸ்துவுக்கு சான்று பகர வேண்டும். இயேசு கிறிஸ்து பிறந்த மாட்டுதொழுவத்தினை அலங்கரித்து மகிழும் நாம் அவர் எமக்கென விட்டுச்சென்ற வார்த்தைகளையும் நற்செயல்களையும் நாள்தோறும் எம் இதயங்களில் ஏற்றுக்கொள்வோம். வெள்ளையடிப்பது எம் இல்லங்களுக்கு மட்டுமல்ல இறைவன் குடிகொள்ளப்போகும் எம் உள்ளங்களுக்குமாய் இருக்கட்டும். பட்டாசு வெடிப்பது போல எம் மீட்பரின் அன்பினை பாரெங்கும் அதிர பறைசாற்றிடுவோம்.

உலகின் மீது வெற்றிகொண்டவர் நம் மீட்பர் ஒருவரே. எனவே அவரின் வழிவந்த அவரின் அன்புப் பிள்ளைகள் என்ற எதிர் நோக்கோடு கிறிஸ்துவின் மாபெரும் கொடையான அன்பையும் சமாதானத்தையும் ஏழை எளியவர்களுடன் பகிர்ந்து வாழ்வோம். இதுவே ஏழ்மையின் கோலமாய் அவதரித்த மீட்பர் இயேசு பாலகனுக்கு நாம் கொடுக்கும் பிறந்ததின பரிசாகும்.

**- கு. மேரி லக்ஷனா**
**Southhall, மறையாசிரியர்**

## வேர்ச்சஞ்சிகை பற்றிய விமர்சனக் கண்ணோட்டம்



சிலவேளைகளில் ஆசிரியர் வேறு ஒரு சூழ்நிலையை மனதில் வைத்து சிலவற்றை எழுதுவார். ஆனால் வாசகர்கள் தத்தமது சூழ்நிலையை மனதில் கொண்டு வாசிப்பர் அந்த வகையில் கருத்துகளின் "கரு" மாறுபடாது. ஆனால் கருத்துகளை தத்தமது சொந்த வாழ்க்கையின் சூழ்நிலைகளுக்கேற்ப இணைத்துப் பார்ப்பது தான் யதார்த்தம். நன்றி.

**- திரேஸ் மரியதாஸ்**

நல்ல சில மாற்றத்தை இளையோரிடையே வேர்ச் சஞ்சிகை உண்டு பண்ணியுள்ளதை வரவேற்கிறேன்.

**- மரியலியா, இலண்டன்**

வேர்ச் சஞ்சிகையில் அதிகமான ஆக்கங்கள் சொந்த ஆக்கங்களாக இருப்பது பலரை எதிர்காலத்தில் எழுத்தாளர்களாக மாற்ற உதவும்.

**- லீலா ரவி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

where picture



# சிறுவர் துஷ்பிரயோகம்

**"அன்னத்தின் தூவி அனிச்ச மலர் எடுத்து சின்ன உடலாகச் சித்தரித்த மெல்லியலே"** என்று சிறுவர்களை விழித்திருந்தார் பாவேந்தர் பாரதிதாசன்.

இன்று இந்தச் சின்னஞ் சிறுவர் களுக்கு இப் பரிதாபகரமான நிலையா? "குழந்தை மணத் தின் கொடுமையை" அன்று எழு திய பாவேந்தர் பாரதிதாசன். இன்று சிறுவர் துஷ்பிரயோகத் தை அவர்கள் படும் இன்னல் களைக் கேட்டிருந்தால் எப்படி எழுதிருப்பார் என எண்ணும் போது நெஞ்சு கனக்கிறது கண் கள் நீரைத் தாரையாகக் கொட் டுகிறது.

"குழந்தையும் தெய்வமும் ஒன்று" என்பார்கள். இன்றைய சூழலில் சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு ஆளாவது மிகமிக அதிகரித்துக் கொண்டிருப்பதை ஆய்வுகள் தெரிவிக்கிறது. இவ்விடயம் என் மனதில் காயத்தை உண்டாக்கி யிருக்கிறது. இதனை நீக்க நாம் ஒவ்வொருவரும் மிக விழிப்பாக இருந்து எம் குழந்தைச் செல் வங்களைக் கண்காணிக்க வேண்டும் என்பதற்காகவே இதனை எழுதுகிறேன்.

அதாவது இலங்கையிலும், உல கெங்கும் இதுபற்றிய கல்வி யைப் புகட்டுகிறார்கள். சிறப்பாக மேலையத்தேய நாடுகளில் சிறு வர் துஷ்பிரயோகம் பற்றிய கல்வியைப் புகட்ட முன்பே பற் பல சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள் ளார்களே! இது மிகவும் அநாக ரிகமும், மனித நேயமுமற்ற செயல்பாடாகவே அரங்கேறுகி றது. இது கண்டிக்கப்படவும் திருத் தப்படவும், மாற்றப்படவும் வேண் டியவையாக இத் துஷ்பிரயோ கத்தை உண்டு பண்ணு பவர் கள் உணர வேண்டும்.

உலகத்தையோ, அரசாங்கத் தையோ குற்றஞ்சாட்டத் தேவை யில்லை என்பது எனது கருத்து.

எமது தமிழ் சமூகத்திலும் இவ் வாறு பல அவலங்கள் அரங் கேறியுள்ளது எமது தாயகத்தில் வித்யா, றெஜினா என்று பல சிறுவர்கள் பரிதாபகரமாகத் துஷ் பிரயோகங்களுக்கு உட்படுத் தப்பட்டிருந்தார்கள். அத்துடன் கொலை செய்யப்பட்டு, செய்த வர்கள் திருட்டுத்தனமாக தப் பித்தும் விடுகிறார்களே இதை எண்ணும்போது மிகமிக வேத னையளிக்கிறதே!!

அதுவும் மிகவும் உயர்ந்த கலாச் சாரப் பண்பாடுகளால் பின்னிப் பிணைக்கப்பட்ட, எமது சில ஆண்கள் ஈடுபடுவது வெட்கித் தலைகுனிய வேண்டியுள்ளது.

எமது நாட்டில் மதுவுக்கும் போதை வஸ்துக்கும் அதிகமாக அடிமையாகியதே இதற்குக் கார ணம் என ஆய்வுகள் காட்டி நிற் கிறது. இவ்விடயம் அனைவரும் அறிந்ததுதான்."

"உன்னைத் திருத்து உலகம் தானாய் திருந்தும்" என்பதை உள்ளத்திலும் எண்ணத்திலும் எண்ண வேண்டும். எம் தாயும், எம் பிள்ளைகளும், சகோதர, சகோதரிகளுமாக ஒவ்வொரு வரையும் எண்ண வேண்டும். இவ்எண்ணமானது, எல்லாச் சிறுவர்களும் என்றும், எங்கும், எப்போதும் பாதுகாப்பாகவும், மகிழ்ச்சியுமாகவும் வலம் வர வழிசெய்யும், நாமும் எம் குழந் தைகளை, குழந்தைகளின் குறும்பு களுடன், ஆரோக்கியமாக, அன் புடன், அகமகிழ்ந்து வாழ, அக்க றையுடன் விழிப்பாயிருப்போம்.

**- திரேஸ் மரியதாஸ்**
**சட்டன்**

# குடும்பம் மனித மாண்பை வளர்க்கும் வாழ்வியல்

குடும்பம் ஒரு குட்டித் திருச்சபை குடும்பம் ஒரு பல்கலைக்கழகம். குடும்பம் மனிதகுலத் தின் ஊற்று குடும்பம் மனித சமுதாயத்தின் நாற்றுமேடை. ஒரு பயிரின் வளர்ச்சியும் பயனும் திறனும் அந்த நாற்று மேடையைச் சார்ந்திருப்பதுபோலே ஒருவரின் பண்பும் பயனும் சீரும்சிறப்பும் அவரைப் பெற்றெ டுத்து வளர்த்த குடும்பத்தையே சாருமென் றால் அது மிகையாகாது. இவ்வுண்மை மையை வலுச்சேர்ப்பதாக இவ்வுலகில் தோன்றிய உதாரண புருசரான ஆண்டவர் இயேசு மற்றும் திருச்சபைப் பூங்காவை அலங்கரிக்கும் உத்தம புனிதர்களையும் கூறிக் கொள்ளலாம். மனித மாண்பபை பரிசோதித்துக் காத்து அதற்குத்தன் இன்னு யிரையும் அர்ப்பணித்த எம் இயேசுவுக்கு ஆரம்ப ஆன்மீகத்தை ஊட்டியாரே அவரின் குடும்பத்து அன்புப் பெற்றோரே. அன்னை மரியும் நீதிமான் என வேதம் கூறும் சூசை யப்பரும் இயேசுவுக்கு மனித மாண்பை வளர்க்கும் இறையறிவையும் நல்லறிவை யும் ஊட்டினர் என்பதை எமக்கு வேதநூல் கற்றுத் தந்திருக்கிறது. திருக்குடும்பத்தின் தாய் மரியாவே துயர்துடைக்கும் உதவிக் கரமானார். தம் உறவினர் எலிசபேத்துக்கு உதவிட விரைந்தார். பண்புடன் வாழ்த்தி பணிவிடை புரிந்தார். அவ்வழியிலே தன் மக னையும் வளர்த்து உருவாக்கினார்.

இந்நூற்றாண்டில் வாழ்ந்த புனிதையாக மனிதநேயத் தாரகையாக ஏழைகள், நலி வுற்றோர், கைவிடப்பட்டோர் பணிக்காக வாழ்ந்து இறந்து பாரதத்தின் ஒப்புயர்வான பாரத ரத்னா என்ற உயர் விருதைப் புனிதர் அன்னை தெரெசாவுக்கு பகிரும் பண்பை யும் இரங்கும் குணத்தையும் ஊட்டியவர்க ளும் அவரது அன்புப் பெற்றோரே. அவரின் பெற்றோரே அன்பு மைய ஆன்மீகப் பக்தி யிலே உறுதி பெற்று விசுவாச வீரத்தில் உயர்ந்திருந்தனர். இதுவே அன்னை தெரேசா என்ற உன்னத உத்தமியைப் புட மிடச்செய்தது என்பதை அவரின் சரிதையை அறிந்த அனைவரும் அறிவர். எனவே நாமும் உத்தம மனித மாண்பை விதைக் கும் குடும்பங்களாக மாறி எம் எதிர்கால சந்ததியை உருவாக்க உறுதியுடன் செயல் படுவோம்.

**- டொறின் ஜீவா, சவுத்தோல்**

## பெந்தக்கோஸ்து இரவில் செபக்குழுக்கள்

**எமது** பணியக அருள் தந்தைகள் பிரித்தானி யாவில் கடந்த 9 நாட்க ளும் பரிசுத்த ஆவியால் நாங்கள் வழிநடத்தப்படவும் எமக்குள் இருக்கும் ஊனியல்புகளை எவ்வாறு எம்மிடமிருந்து களைத்து எறிய வேண்டும் என்பதையும் பல பணித்தளங்களிலும் தியான வழிபாடுகளை நடாத்தி எம்மை ஆயத்தப்படுத்தினர். இங்கிலாந்தில் பல கததோலிக்க செபக்குழுக்கள் ஆலயத்திலும் ஆல யத்துக்கு வெளியேயும் இயங்கி வந்தது எல்லோரும் அறிந்ததே. அனைத்து செபக்குழுக்களையும் வொளிங்ரன் ஆலயத்தில் ஒன்று சேர்த்தார் எமது பங்குத்தந்தை அருட்பணியாளர் ஜெயராசா எல்மோ அருள்நேசன். கத்தோலிக்க மக்கள் அனைவரையும் ஒன்றாக, நாமெல்லாம் ஒரே திருச்சபையின் பக்தர்கள் என்ற எண்ண ஒன்றாக ஆலயத்தில் சேர்த்தார். ஏறத்தாழ நூறு பேருக்கும் மேலாக இரவிரவாக செபித்துக் கொண்டிருந்தோம். ஆரம்பமே அதிர வைத்ததாக, அருட்பணியாளரின் அரிய சிறந்த சிந்தனையின் வெளிப்பாடென, பலரும் விழிகளை உயர்த்திப் பார்க்க, வைத்தாக பலரும் பேசிப் பெருமைப்பட்டனர். - ***Noiline M***

### குறைடனில் வாழும் கத்தோலிக்க மக்கள்

குறைடனில் வாழும் மக்கள் தமிழ் திருப்பலியில் பங்கெடுப்பதில் பல சவால்களைச் சந்தித்தனர். நீண்ட இடைவெளிக்குப் பின்பு அருட்பணியாளர் எல்மோ அருள்நேசனின் முயற்சியால் மாதத்தின் நான்காவது புதன்கிழமைகளில் இரவு 6 மணியளவில் வழிபாடுகள் நடைபெற்றுவருகிறது . இதன் ஊடாக அங்குள்ள மக்கள் மிகுந்த மகிழ்ச்சியையும் வரவேற்பையும் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையில் யாழ் மறைமாவட்டத்தின் வகிபாகம்



**அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை**
பல்கலைக்கழக ஊடக விரிவுரையாளர்

இலங்கையில் இன்று யாழ்ப்பாணம் - திருகோணமலை - மன்னார் - மட்டக்களப்பு என்ற நான்கு தமிழ் மறை மாவட்டங்கள் உள்ளடங்கலாக கொழும்பு - கண்டி - காலி - சிலாபம் - அனுரதபுரம் - இரத்தினபுரி - பதுளை - குருநாகல் என 12 மறைமாவட்டங்கள் உள்ளன. இவற்றில் யாழ் மறை மாவட்டம் ஒரு பழம்பெரும் மறைமாவட்டம் - பல மறை மாவட்டங்களுக்குத் தாய் மறைமாவட்டமாகத் திகழ்ந்த மறை மாவட்டம் - பல மறைமாவட்டங்களுக்கு ஆயர்களை வழங்கிய மறைமாவட்டம். இன்னுமொரு ஆயர் பேரவை உருவாக்கப்படுமானால் அதன் தாய் மறை மாவட்டமாகத் திகழத்தகுதி வாய்ந்த மறை மாவட்டம். யாழ் மறைமாவட்டத்தின் இந்தச் சிறப்புக்களை விளக்குகிறது இக்கட்டுரை.

**யாழ் மறைமாவட்டம் - தமிழ் மறை மாவட்டங்கள் அனைத்திற்கும் தாய் மறை மாவட்டம்:**

17 பெப்ரவரி 1845 இல் அப்போஸ்தலிக்க பரிபாலகரின் ஆளுகைக்கு உட்பட்ட பிரிவாக யாழ்ப்பாணம் உருவாக்கப்பட்டது. 01 செப்ரெம்பர் 1886இல் யாழ்ப்பாணம் மறை மாவட்டமாகத் தரமுயர்த்தப்பட்டது.

யாழ் மறைமாவட்டம் தமிழ் மறைமாவட்டங்கள் அனைத்திற்கும் தாய் மறைமாவட்டமாகத் திகழ்ந்து பல புதிய மறைமாவட்டங்களைப் பெற்றெடுத்துள்ளது.

திருகோணமலை மட்டக்களப்பு மறை மாவட்டம் 25 ஆவணி 1893ஆம் ஆண்டிலும் - அனுராதபுர அப்போஸதலிக்க பாபாலக பிரிவுவாக 19 டிசெம்பர் 1975ஆம் ஆண்டிலும் (19 மார்ச் 1982இல் அனுராதபுரம் மறைமாவட்டம் ஆகியது) - மன்னார் மறை மாவட்டம் 24 ஜனவரி 1981ஆம் ஆண்டிலும் யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் இருந்து பிரிக்கப்பட்டன.

தன்னிடமிருந்து புதிய தமிழ் மறைமாவட்டங்கள் பிரிந்து செல்கின்ற போது அந்தந்த மறை மாவட்டங்களுக்குத் தேவையான ஆயர்களையும் யாழ் மறைமாவட்டமே வழங்கி வந்துள்ளது.

இந்த வகையில் திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டம் - மன்னார் மறைமாவட்டம் பின்னர் திருகோணமலை மறைமாவட்டம் ஆகிய மறைமாவட்டங்களுக்கான யாழ் மறைமாவட்டத்தைச் சார்ந்த ஆயர்களையும் பின்னர் மண்ணின் மைந்தர்களாக ஆங்காங்கு ஆயர்கள் நியமிக்கப் பட்டமையையும் நோக்குவோம்.

திருகோணமலை மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் துணை ஆயராக 09 பெப்ரவரி 1967 முதல் 18 டிசம்பர் 1972 வரை மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை பணியாற்றியுள்ளார். 21 நவம்பர் 1968இல் யாழ் மறை மாவட்டத் துணை ஆயராக நியமனம் பெற்ற மேதகு எல்.ஆர்.அன்ரனி ஆண்டகை 15 பெப்ரவரி 1974 முதல் 17 மார்ச் 1983 வரை திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயராக பணியாற்றியுள்ளார். 07 மே 1983 முதல் 03 யூலை 2012 வரை மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை ஆயராகப் பணியாற்றியுள்ளார்.

திருகோணமலை மறைமாவட்டம் 25 ஆவணி 1893 இல் யாழ் மாவட்டத்தில் இருந்து பிரித்து உருவாக்கப்பட்டது. 23 ஒக்டோபர் 1967 இல் இது திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் ஆயராக மேதகு எல்.ஆர்.அன்ரனி ஆண்டகையைத் (1974 - 1983) தொடர்ந்து மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை (1983 - 2012) ஆயராக பணியாற்றினார்.

03 யூலை 2012இல் திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் இருந்து மட்டக்களப்பு புதிய மறை மாவட்டமாக உருவாக்கப்பட்டது. மட்டக்களப்பு புதிய மறை மாவட்டமாக உருவாக்கப்பட்டபோது மட்டக்களப்பு மண்ணின் மைந்தரான மேதகு யோசவ் பொன்னையா ஆண்டகை ஆயராக நியமிக்கப்பட்டார்.

திருகோணமலை மறைமாவட்டத்தின் ஆயராக மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை நியமிக்கப்பட்டார். மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை புதிய ஆயரின் நியமனத்துடன் 03 யூன் 2015 தனது பணியில் இருந்து ஓய்வு பெற்றார். தற்போது திருகோணமலை மறைமாவட்டத்தில் மண்ணின் மைந்தரான மேதகு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை பணியாற்றுகிறார்.

**யாழ் மறைமாவட்டத்தில் இருந்து மன்னார் மறைமாவட்டம்:**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24 ஜனவரி 1981இல் யாழ் மறைமாவட்டத்தில் இருந்து மன்னார் மறைமாவட்டம் பிரிக்கப்பட்டபோதும் யாழ் மறை மாவட்டத்தைச் சேர்ந்த மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை மன்னார் மறைமாவட்டத்தின் முதல் ஆயராக நியமிக்கப்பட்டார். மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை 1992ஆம் ஆண்டு யாழ் மறைமாவட்ட ஆயராக அவரைத் தொடர்ந்தும் மன்னார் மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராக யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகை 1992ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். இவரின் பணிக்காலம் முடிவடைய 2016ஆம் ஆண்டு முதல் மன்னார் மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலகராகப் ஆயர் மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை பணி ஏற்றுள்ளார். மன்னார் மறைமாவட்டத்திற்குப் புதிய ஆயர் நியமிக்கப்பட்டு பொறுப்பேற்கும்வரை அப்போஸ்தலிக்க பரிபாலகராகப் பணி ஆற்றவுள்ளார். மன்னார் மறைமாவட்டமும் தற்போது தன் மண்ணின் மைந்தர் ஒருவரையே ஆயராக்க வேண்டும் என்று எண்ணம் கொண்டிருப்பது வரவேற்கத்தக்கதே.

**இலங்கையிலே மிகப்பெரிய பேராலயம் யாழ் மறைமாவட்ட புனித மரியன்னை பேராலயம்:**

இலங்கையின் வடபகுதியின் கத்தோலிக்க மையம் என அழைக்கப்படக் கூடிய - யாழ் ஆயர் இல்லத்திற்கு அருகாமையில் அமைந்து - பல கத்தோலிக்க ஆலயங்களை புடைசூழ கொண்டு - யாழ் பிரதான வீதிக்கு அருகாமையில் கதீற்றல் வீதியில் அழகிய பிரமாண்ட தோற்றத்துடன் கம்பீரமாக தலை நிமிர்ந்து நிற்கும் பேராலயமே - யாழ் புனித மரியன்னை பேராலயம் ஆகும்.

யாழ் ஆசனக் கோவில் என்றும் பெரிய கோவில் என்றும் புனித கொஞ்சேஞ்சி மாதா ஆலயம் என்றும் மரியன்னை பேராலயம் என்றும் அழைக்கப்படுகின்ற யாழ் மறைமாவட்ட ஆயரின் வதிவிட ஆலயமும் - தலைமைப்பீட வழிபாட்டுத்தளமும் - பங்குத்தளங்கள் அனைத்தின் தாயகமாகவும் விளங்குகின்ற புனித மரியன்னை பேராலயம் இலங்கையிலே மிகப்பெரிய பேராலயமாகும். 35 ஆயிரம் சதுரஅடி தளப் பரப்பைக் கொண்ட தற்போதுள்ள யாழ் பேராலயம் வரலாற்றில் நான்காவது ஆலயம் ஆகும். இது இலங்கையில் தற்போது இருக்கும் மிகப் பெரிய - ஒரே நேரத்தில் பெரும் எண்ணிக்கையிலான மக்களைக் கொள்ளக்கூடிய - பேராலயம் என்ற சிறப்பை பெற்ற பேராலயம் ஆகும்.

இன்று பேராலயம் அமைந்துள்ள இடமானது சங்கிலி மன்னன் காலத்தில் அடர்ந்த காட்டுப்பகுதியாக இருந்தது என யாழ்ப்பாண வைபவ மாலை என்னும் நூலில் இருந்து அறியவருகின்றது. சங்கிலி மன்னனின் மூத்த மகன் கத்தோலிக்க மதத்தை தழுவியமையால் சினம்கொண்ட மன்னன் மகனை சிரச்சேதம் செய்து எரித்த இடம் இது எனவும் அவ்விடத் தரை சிலுவை வடிவில் பிளவுண்டதாகவும் வேறுபல புதுமைகள் நிகழ்ந்ததாகவும் வாய்வழிப் பாரம்பரியம் ஒன்று உண்டு.

17 பெப்ரவரி 1845 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் அப்போஸ்தலிக்க ஆளுனர் பிரிவாக உருவாக்கப்பட்டது. 1846ஆம் ஆண்டு முதல் 1886ஆம் ஆண்டு வரை 4 அப்போஸ்தலிக்க பரிபாலகர்கள் யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க பரிபாலக பிரிவை ஆட்சி செய்துள்ளனர். அந்த 4 அப்போஸ்தலிக்க ஆளுனர்களும் முறையே ஆயர் ஒறாசியோ பெற்றக்கினி (1847 முதல் 1849 வரை பதில் அப்போஸ்தலிக்க ஆளுனர்) பின்னர் அப்போஸ்தலிக்க ஆளுனர் (1849 - 1857) - ஆயர் ஜே.ஸ்ரீபன் சமறியா அ.ம.தி (1857 - 1868) - ஆயர் கிறிஸ்ரோபர் பொன்ஜின் அ.ம.தி (1868 - 1883) ஆயர் அன்று மெலிசன் அ.ம.தி (1883 - 1886) ஆகியோராவர்.

அப்போஸ்தலிக்க பரிபாலக பிரிவாக இருந்த யாழ்ப்பாணம் 1886ஆம் ஆண்டு செப்ரெம்பர் 01இல் மறைமாவட்டமாகத் தரமுயர்த்தப்பட்ட பின்னர் ஆயர் அன்ரு மெலிசன் அ.ம.தி ஆண்டகை தம் அப்போஸ்தலிக்க ஆளுனர் பணியைத் தொடர்ந்து யாழ் மறைமாவட்டத்தின் முதல் ஆயராக (1886 - 1893) பணியாற்றியுள்ளார். யாழ் மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராக கென்றி யூலியன் அ.ம.தி (1893 - 1919) ஆண்டகையும் மூன்றாவது ஆயராக யூலெஸ் ஏ. புறோ அ.ம.தி (1819 - 1823) ஆண்டகையும் நான்காவது ஆயராக ஜே.ஏ கயமர் அ.ம.தி (1824 - 1950) ஆண்டகையும் ஐந்தாவது ஆயராகவும் முதல் சுதேச ஆயராகவும் ஜே.எமிலியானூஸ்பிள்ளை அ.ம.தி (1950 - 1972) ஆண்டகை பணியாற்றியுள்ளனர். யாழ் மறைமாவட்டத்தின் ஆறாவது ஆயராகவும் மறைமாவட்ட குருக்களில் இருந்து முதல் ஆயராகவும் பி.தீயோகுப்பிள்ளை ஆண்டகையும் (1972 - 1992) ஏழாவது ஆயராக தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை (1992 - 2015) பணியாற்றினார். 2015ஆம் ஆண்டு முதல் யாழ் மறைமாவட்டத்தின் ஆயராக மேதகு கலாநிதி ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை பணியாற்றுகிறார். அவருக்கு அடுத்தபடியான பணிப்பதவியில் குருமுதல்வராக அருள்திரு கலாநிதி யோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் பணியாற்றுகிறார்.

**யாழ்ப்பாண மறைமாவட்டத்திற்கென நேரடி நியமனம் பெறும் முதல் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை**

யாழ் மறைமாவட்டத்தில் சுதேச ஆயர்கள் நியமனம்பெறத் தொடங்கிய பின்னர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ் மறைமாவட்டத்திற்கென நேரடியாக நியமனம் பெறும் முதல் ஆயராவார் என்பது இங்கு சிறப்புமுக்கியத்துவத்துடன் நோக்கப்பட வேண்டியதாகும்.

மேதகு ஜே.எமிலியானூஸ்பிள்ளை அ.ம.தி ஆண்டகை யாழ் மறைமாவட்டத்தின் வாரிசு ஆயர் உரிமையுடன் மேதகு ஜே.ஏ கியோமர் அ.ம.தி (1824 - 1950) ஆண்டகையின் துணை ஆயராக 1949ஆம் ஆண்டு நியமனம் பெற்று யாழ் மறைமாவட்டத்தின் ஆயராக 1950ஆம் ஆண்டு பொறுப்பேற்றார். ஆயர் மேதகு பி.தீயோகுப்பிள்ளை ஆண்டகை 1967ஆம் ஆண்டு திருகோணமலை மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் துணை ஆயராக நியமனம் பெற்று 1972 இல் யாழ் மறைமாவட்டத்தின் ஆயராகப் பொறுப்பேற்றவர். ஆயர் மேதகு எல். ஆர். அன்ரனி ஆண்டகை 1968 ஆம் ஆண்டு யாழ் மறைமாவட்டத்தின் துணை ஆயராக நியமனம் பெற்று 1972இல் திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் வாரிசு ஆயர் உரிமையுடன் பொறுப்பேற்று 1974ஆம் ஆண்டு திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் ஆயரானவர். மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை 1981ஆம் ஆண்டு மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக நியமனம் பெற்றுப் பின்னர் 1992ஆம் ஆண்டு யாழ் மறைமாவட்டத்தின் ஆயரானவர். இந்தவகையில் யாழ் மறைமாவட்டத்திற்கென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதேச ஆயர்கள் நியமனம் பெறத் தொடங்கிய பின்னர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ் மறைமாவட்டத்திற்கென நேரடியாக நியமனம் பெறும் முதல் ஆயராவார்.

**47 ஆண்டுகளின் பின்னர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை திருநிலைப்படுத்தும் சடங்கு:**

ஆயர் ஒருவரைத் திருநிலைப்படுத்தும் சடங்கு ஒரு மறைமாவட்டத்தில் அடிக்கடி நிகழும் ஒரு நிகழ்வல்ல. யாழ் மறைமாவட்டத்தில் புனித மரியன்னை பேராலயத்தில் 1949ஆம் ஆண்டு மேதகு ஜே.எமிலியானூஸ்பிள்ளை அ.ம.தி ஆண்டகையின் திருநிலைப்படுத்தல் சடங்கு நடைபெற்றது. அதன் பின்னர் 1968ஆம் ஆண்டு ஆயர் மேதகு எல். ஆர். அன்ரனி ஆண்டகையின் திருநிலைப்படுத்தல் சடங்கு (பேராலய வளாகத்தில்) நடைபெற்றது. 1968ஆம் ஆண்டின் பின்னர் 2015இல் அதாவது 47 ஆண்டுகளின் பின்னர் ஆயர் ஒருவரின் திருநிலைப்படுத்தும் சடங்கு யாழ் மறை மாவட்டத்தில் புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றது.

1967 ஆம் ஆண்டு மேதகு பி.தீயோகுப்பிள்ளை ஆண்டகையின் திருநிலைப்படுத்தல் சடங்கு திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் நடைபெற்றது. 1981ஆம் ஆண்டு மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் திருநிலைப்படுத்தல் நிகழ்வு மன்னார் மறைமாவட்டத்தில் மடுப்பதியில் நடைபெற்றது. 1983ஆம் ஆண்டு திருகோணமலை மட்டக்களப்பு மறை மாவடடத்தின் ஆயராக நியமனம் பெற்ற ஆயர் மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையின் திருநிலைப்படுத்தல் சடங்கு உரோமாபுரியில் நடைபெற்றது.

ஆயர் ஒருவரின் தெரிவு முழுக்க முழுக்க உரோமாபுரியில் வத்திக்கானில் நற்செய்தி அறிவிப்புப் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டு பாப்பரசரால் அங்கீகரிக்கப்பட்டு ஒப்பமிடப்பட்டு வெளியிடப்படும் ஒரு விடயமல்ல. அதேவேளை அவசர அவசரமாக வேகமாக மேற்கொள்ளப்படும் ஒரு பணியுமல்ல. ஒரு ஆயர் 75 வயதை அடைந்தவுடன் தனது பணி ஓய்வுக் கடிதத்தை தாம் 75 வயதை அடைந்து விட்டதாகக் குறிப்பிட்டுப் பாப்பரசருக்கு அனுப்பி வைக்கவேண்டும். அதன் பின்னரே புதிய ஆயர் ஒருவரைக் குறிப்பிட்ட மறை மாவட்டத்திற்கு நியமிப்பதற்கான பணிகள் ஆரம்பமாகின்றன. தற்போதைய ஆயர் தெரிவுப்பணி யாழ் மறைமாவட்டத்தில் கிட்டத்தட்ட 2 ஆண்டுகளுக்கு அதிகமான காலத்தில் நடைபெற்றுள்ளது.

**யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையும் சமகாலத்தின் தேவையும்:**

4 ஆயிரத்து 440 கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட யாழ் மறைமாவட்டத்தில் ஏறக்குறைய 15 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 2 இலட்சத்து 47 ஆயிரத்து 315 பேர் கத்தோலிக்கராவர். யாழ் மறைமாவட்டத்தின் 54 பங்குகளில் ஏறக்குறைய 162 குருக்கள் பணியாற்றுகின்றனர்.

மூன்று தசாப்த கொடிய போர் முடிந்து - நிலைமைகள் சற்றுச் சாதகமாகி - நல்லெண்ண அரசொன்று உருவாகி - இனவாதம் சற்று குறைந்து - அமைதியும் புரிந்துணர்வும் ஓரளவு ஏற்பட்டு - தமிழ் மக்கள் நின்மதிப் பெருமூச்சு விடும் நிலையில் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை போன்ற பன்முக ஆளுமை கொண்ட ஒருவரின் பணி யாழ் மறை மாவட்டத்திற்கு காலத்தின் தேவையும் கட்டாயமும் ஆகும். உயர்ந்த உருவம் - கம்பீர நடை - சிரித்த முகம் - கனிவான பார்வை - அன்பான பேச்சு - கடமையில் கவனம் - சிறந்த நிர்வாகம் - தூர நோக்கு - துணிவான செயல்முறை - அனைவரையும் ஆட்கொள்ளும் சுபாவம் எனப் பன்முக ஆளுமைகொண்ட ஒருவரான மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையிடம் யாழ் மறைமாவட்டம் மட்டுமல்ல இலங்கை வாழ் தமிழ் மக்களும் புலம் பெயர்ந்து உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களும் நிறையவே எதிர்பார்க்கின்றனர்.

யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கு நிறைந்த அருள் - வழிகாட்டும் ஞானம் - நீடித்த ஆயுள் - நல்ல சுகம் - நேர்மையான ஆட்சி - முழுமையான ஒத்துழைப்பு என்பன நிறையவே கிடைக்க இறையாசீர் வேண்டுவோம் ■

## வேர்ச் சஞ்சிகையின் நிர்வாகம்

28-09-2108 புதிய நிர்வாகசபைக் கூட்டதில் எடுக்கப்பட முடிவுக்கு அமைய, வேர்கள் சஞ்சிகையின் நிர்வாகம் ஊடக பணியகத்தின்கீழ் பணியாற்றும். இதன் ஆசிரியராக அருள் தந்தை எல்மோ அருள்நேசன் அவர்கள் பணியாற்றுவர்.

அன்பான உறவுகளே, உங்களின் ஆக்கபூர்வமான சிந்தனைத் துளிகள் வேர்ச் சஞ்சிகையின் தரத்தை உயர்த்தி கொள்வதுடன் வாழ்வோடு வழிபாடு பின்னிப்பிணைந்து, பயணிக்க, வாழ்வை அர்த்தமுள்ளதாக மாற்றவே, இச்சஞ்சிகையானது உருவாக்கப்பட்டது. தொடர்ந்தும் பல்வேறு பரிமாணங்களைப் புகுத்தி வினைத்திறனாக மாற்ற உதவிய இயக்குனரும் ஆசிரியருமான அருட்பணியாளர் எல்மோ அருள்நேசனுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து மகிழ்கிறோம். எனவே, இந்த உயரிய குறிக்கோளுக் கேற்ப, உயரிய ஒரே குறிக்கோள் ஒளி வீச, ஒவ்வொருவரும் முயற்சிபோம்.

ஊடக ஆணையகம் வேர்கள் சஞ்சிகை - **verkalgb@gmail.com**

இயக்குனர், ஆசிரியர்: அருள்தந்தை எல்மோ அருள்நேசன்

செயலாளர்: கபிரியேலபிள்ளை நிமலன்

ஊடக ஆணையகம்: Laxthana Queentans Fernando, Thires Mariathas, Noieline Mariabalanayagam

**பணியக ஊடக தொடர்பாளர்கள்:**

01. Earlsfield - Mr. Philipiah - Romalojoseph
02. Wallington - Ms. Anisha Harridas
03. Chingford - Mr. Victor Sivagunam.
04. Southall - Mrs Dorin Iruthayarajah
05. Kenton - Mr Amalathas
06. Gants Hill - Mrs. Mithula Julias
07. Eastham - Awiating Name
08. Coventy - Mr. Jackson
09. Wembley - Awaiting Name
10. Leicester - Mr Johnson Fernando
11. Lewshiam - Awaiting Name
12. Milton Keynes - Jacqline

## வேர் மரமாக உரமான உங்களையும் உள்ளத்தில் நன்றியுடன் நினைத்து...

எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த எழுத்தாளர்கள், பெருந்தகைகள் ஆலோசகர்களாகப் பணிபுரிந்த அனைவருக்கும் நன்றி. இச்சஞ்சிகையை தரமாக்குவதற்கு ஒத்துழைத்த மதிப்புக் குரிய ஆய்வாளர்களுக்கும் மனமார்ந்த நன்றி.சிறப்பாக இச்சஞ்சிகையை சமூகமாகிய எம்மிடம் கையளித்த எமது அன்புக்கும், வணக்கத்துக்கு முரிய, பணியக இயக்குநர் செபமாலை செபநேசரட்ணத்தை நன்றியுடன் நினைக்கிறோம். இவ் வேர்ச் சஞ்சிகையை ஆரம்பித்து வைத்த ஆரம்ப கர்த்தாவாகிய குருவானவர் றொசானையும் நன்றியுடன் நினைக்கிறோம், இதற்கு இவை அனைத்தையும் ஆக்கமாக்க, அருள்பாலித்த ஆண்டவனின் பாதங்களைப் பணிந்து, எல்லாப் புகழும் அவனுக்கே என நன்றியுடன் காணிக்கையாக்குகிறோம்.

**- ஊடக பணியகம் - வேர்கள் சஞ்சிகை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஐரோப்பிய தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியாளர் ஒன்றுகூடல்"

**"இதோ நான் உமது அடிமை"** என்ற இறைவார்த்தைக்கேற்ப ஐரோப்பாவில் எமது ஆன்மீக அருட்தந்தையர்கள் தங்களை முழுமையாக அர்ப்பணித்து எங்களுக்காக செய்யும் பணியானது வார்த்தையால் விபரிக்க முடியாது. எம் கலை கலாச்சாரங்களுக்கு இசைவாகவும், எம் ஆன்மீக வளர்ச்சிக்காகவும் அரும்பாடுபட்டு உழைத்துக் கொண்டிருக்கும் இவ்ஆன்மீக அருட்தந்தையர்கள் வருடத்துக்கு ஒருமுறை ஐரோப்பாவில் ஏதாவது ஒரு நாட்டில் ஒன்றுகூடி தங்களது தியான வழிபாடு ஞானொடுக்கத்தின் பின் பல ஆலோசனைகள் பல திட்டங்களில் இறைவன் சொல்லுவதை செய்ய முயல்கிறார்கள்.

இம்முறை அதில் பணியாற்றுபவர்களையும் ஒன்றுகூட்டி ஒன்றுகூடல் வைப்பதாக முடிவெடுத்ததன் பயனாக இவ்வருடம் புரட்டாதி மாதம் 21 ,22, 23ம் திகதிகளில் ஐரோப்பாவில் இயங்கிவரும் ஒவ்வொரு ஆன்மீக பணி மையங்களிலும் இருந்து ஆன்மீக அருட்தந்தையர்களுடன் இணைந்து, நிர்வாக உறுப்பினர்கள், பொதுப் பணியாளர்கள் என்று பலதரப்பட்ட பணியாளர்களையும் ஒருங்கே ஒன்றுகூட்டி "ஐரோப்பிய தமிழ் கத்தோலிக்க ஆன்மீக உடன் பணியாளர் ஒன்றுகூடல்" என்ற தலைப்பின் கீழ் பிரான்ஸ் தேசத்தின் மையப் பகுதியான பாரிஸ் நகரில் வெகுசிறப்பாக நடத்தினார்கள்.

மூன்று நாள் கருத்தரங்காக அமையப் பெற்ற இந்நிகழ்விற்கு லண்டன், பிரான்ஸ், ஜெர்மனி, சுவிஸ், இத்தாலி, நோர்வே போன்ற நாடுகளில் இருந்து 75 இற்கு மேற்பட்டவர்கள் வருகை தந்திருந்தார்கள். தனிநபர் அறிமுகத்துடன் கூடிய இறை வழிபாட்டுடன் ஒன்றுகூடல் ஆரம்பமானது. கத்தோலிக்க திருச்சபையின் சட்டதிட்டங்கள் அனைத்தையும் முற்றுமுழுதாக கற்று தேர்ந்தவரும் தமிழ்மொழியில் மொழிபெயர்த்தவருமான சட்ட ஆய்வாளர் அருட்தந்தை இராயப்பன் தனது நுணுக்கமான பேச்சுக்களால் முதல் நாளை அலங்கரித்தார். சட்டங்களின் தேவை பற்றி விரிவுபடுத்திய அவர் ஆன்மீகத் தந்தையர்கள் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களுக்கு பொறுப்பாக இருக்கிறார் என்று தொடங்கி அவர் களுடன் பேசும்போது அவர்களின் மனம் நோகாமல் மதித்து பேச வேண்டும் என்பது பற்றி அன்பாக விளக்களுடன் கூறியது மிகவும் போற்றுதலுக்கு உரியது.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் காலை 9:00 மணிக்கு ஆரம்பமாகி இரவு 10:30 மணிவரைக்குமாக நீடித்தது. இன்றைய நாளில் பங்கேற்ற அனைவரும் மத்தேயு, மாற்கு, யோவான், லூக்கா என்று நான்கு குழுக்களாக பிரிக்கப்பட்டார்கள். குழுப்பகிர்வு, திருப்பலி, கலை நிகழ்வு கள் என்று தொடர்ச்சியான நிகழ்வுகள் இடம்பெற்றன. முக்கியமாக தலைமைத்துவம் பற்றி தெளிவாக பேசப்பட்டது. தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களின் பண்புகள் எப்படி இருக்க வேண்டும் என்று தெளிவுபடுத்தப்பட்டது. மக்களுடன் இணைந்து இவர்கள் அன்பாக பணி செய்ய வேண்டும் என்பதை பண்பாக அருள் உரைத்தார்கள்.

பொறுப்பற்ற தலைமையினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள், தனக்கு கொடுக்கப்பட்ட தலைமையை பயன்படுத்தி சமநிலை பேண வேண்டும் என்பதும் ஆண்டவரின் பணி என்பதும் மக்களின் மனம் நோகாது அன்பாலும் கனிவாலும் அவர்களுடன் கலந்து பொறுமையால் எமக்கு கொடுக்கப்பட்ட பணியில் ஆண்டவரை முன்நிறுத்தி செய்ய வேண்டும் என்பதையும் அமைதியுடனும் செபத்துடனும் தாழ்ச்சியுடன் செய்ய வேண்டும் என்பதை எடுத்தியம்பினார்கள்.

எம்பிள்ளைகளின் வாழ்வு வளம்பெற உடன்பணியாளர்களாக அவர்களையும் உருவாக்குவதில் நாம் முழுப்பொறுப்பும் ஏற்க வேண்டும் என்றும் பேசப்பட்டது. தலைமை பொறுப்பில் இருப்பவர்கள் அவர்களின் திறமைகளை இனம் கண்டு உள்வாங்கி ஊக்குவித்து அவர்களை முன்கொணர வேண்டும்.அவர்களின் சிறிய சேவைகளையும் பாராட்டும்போது அது அவர்களுக்கு உந்துசக்தியாக இருக்கும் என்று அருள் உரைத்தார்கள். கலை நிகழ்வுகளில் குழுக்களாக தனி நபர்களாக ஒவ்வொருவரின் பங்களிப்பும் மிகவும் உற்சாகமாக இருந்தது. இரண்டாம் நாள் இனிதே நிறைவேறியது

மூன்றாம் நாளில் கருத்துப் பரிமாற்றங்கள், புரிந்துணர்வுகள், சந்திப்புகள், தொடர்பு பரிமாற்றங்கள், என்று ஒவ்வொருவரும் உற்சாகமாக இயங்கிக் கொண்டிருந்தார்கள். காலை நிகழ்வுகள் ஆரம்பமானதும் முன்கூட்டியே அறிவித்திருந்தது போல தங்கள் தங்களது பணியகத் தின் செயல்பாடுகள் பற்றி எடுத்துக் கூறும்படி கேட்கப் பட்டது. ஒவ்வொரு பணியகங்களில் பொறுப்பானவர்கள் தங்களின் செயல்பாடுகளை எடுத்துரைத்தார்கள். இதனால் பல செயல்பாடுகளை எல்லோரும் அறியக்கூடியதாக இருந்தது. கொண்டாட்டங்கள், ஊடகத்துறையின் வளர்ச்சி, டிவி, ரேடியோ என்று எம்மவர்களின் அரும்பணிகளை யாவரும் தெரிந்து கொள்ளும் வாய்ப்பையும் பெற்றுக் கொண்டோம்.

புலம்பெயர் மக்களின் பணியார்வத்தின் பிறப்பிடம், ஊற்று எது? என்ற கேள்விக்கு பலதரப்பட்ட பதில்கள் வெளிவந்தன. பெரும்பாலானோர் தங்களின் பெற்றோர் காட்டிய வழிநடத்தல்தான் காரணம் என்று பல உதாரணங்களுடன் கூறினார்கள் தினமும் குடும்ப செபமாலை சொல்வது, தினமும் காலை திருப்பலியில் பங்கெடுக்க வைப்பது, வீட்டைவிட்டு வெளியே போகும்முன் ஒரு கணமேனும் நிறுத்தி பிதா சுதன் போட வைப்பது, கோவில்களை கடந்து செல்லும்போது தலைவணங்கி நற்கருணை நாதருக்கு மரியாதை செலுத்துவது என்று எம் பெற்றோர் கள் எம்மை பண்படுத்திய விதம்தான் எம்மை ஆன்மிகக்கத்தில் ஊற வைத்து பணியார்வத்தை தூண்டியது என்றார்கள். வரவேற்பு மிகுதியாக இருந்தது. ஒன்றுகூடலின் மீள்ஆய்வாக பல பயன்தரும் கருத்துக்கள் பகிரப்பட்டன. இறுதியாக இறைஆசியிருடன் கூடிய ஒன்றுகூடலாக அன்பு பரிமாற்றங்களுடன் நல்லெண்ணக் கருத்துக்களை சுமந்தவர்களாக விடைபெற்று சென்றோம்.

நன்றி அன்புடன்,
***Rampala Francis.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பக்கம்

## சிறுவர் பாடகர் - கென்ரன்

